**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No. 236/2017** **Date:31/01/2024**

**PW 16 (சிவசெந்தில்குமார் த/பெ. கந்தசாமி ) குறுக்கு விசாரணை சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது**

**(எதிரிகள் 2, 3, 5 ஆஜர்/ 1,4,6,7,8 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**குறுக்கு விசாரணை 2,3, எதிரிகள் தரப்பில்-**

1. இந்த வழக்கிற்கான புகாரில் புகார் தேதியாக 28.04.2009 என குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களுக்கு துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து புகார் அனுப்பப்பட்டது. இந்த புகாரை கணேசன், துணைபதிவாளர், கூடுதல் பொறுப்பு அவர்கள் கொடுத்துள்ளார். இந்த வழக்கை இந்த கணேசன் என்பவர் தான் துறை ரீதியாக விசாரணை செய்த அதிகாரியா என்றால் ஆமாம், பின்பு சாட்சி சிவஞானம் என்பவர் விசாரித்துள்ளதாக கூறுகின்றார். கணேசனுக்கு நேரடியாக எந்த விபரமும் தெரியாது என்றாலும், விசாரணை அறிக்கையின் அடிப்படையில் தான் இந்த புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். விசாரணை அதிகாரியால் விசாரணை முறையாக செய்யப்படவில்லை என்றாலும், அதை நானும் முறையாக விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 2, 3 எதிரிகளைப் பொறுத்தவரை அவர்கள் சட்டத்திற்கு புறம்பாக ஆதாயம் அடைந்தார்கள் என எந்த ஆவணங்களும் இல்லை என்றால் சரியல்ல. எந்த ஆவணங்கள் அவ்வாறு உள்ளது என்றால் எந்த ஆவணங்களும் இல்லை. கூட்டுறவுத்

துறையில் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தனி அலுவலர் தான் பொறுப்பாவார் என்றால் சரிதான். அவர்தான் அனைத்து உத்தரவுகளையும் பிறப்பிக்க முடியும் என்றால் சரிதான். அவர் பிறப்பித்த உத்தரவுகளை அவரே திரும்பப் பெறுவதற்கு அவர் பொறுப்பாவார் என்றால் சரியல்ல. பொதுவாக இனிப்பு பண்டங்களை தயார் செய்வதற்கு ராஜகோபால் மாவட்ட பதிவாளரிடம் அனுமதி பெற்றுள்ளாரா என்றால் பெற்றுள்ளார். துணைப்பதிவாளர் இந்த புகாரை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தனி அலுவலர் ஒரு தீர்மானம் இயற்றி அதை சுற்றறிக்கையாக அனுப்பவேண்டும் என்றாலும், அவ்வாறு அனுப்பும்போது அவருக்கு கீழ் பணிபுரியும் ஊழியர்கள் அதில் கையொப்பம் இடவேண்டும் என்றாலும் சரிதான். பணியாளர்கள் கையொப்பம் இட்டதால் மட்டுமே சுற்றறிக்கையினை ஏற்றுக்கொண்டதாக கருதப்பட முடியாது என்றால் சரியல்ல. இனிப்பு பண்டம் செய்ததாக கூறப்படும் ஹரிணி டிரேடர்ஸ் நிறுவனம் ராஜகோபாலுடையது என்றால் சரியல்ல, ஆனால் அது அவரது மகனுடையது. அவரது மகன் மணிகண்டன் தான் இந்த வழக்கில் 6 ஆம் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் கூறப்பட்ட இனிப்பு பண்டங்களைத் தவிர இதற்கு முன்பு வேறு எந்த இனிப்பு பண்டங்களும் இந்த சங்கத்தால் தயார் செய்யப்பட்டு விற்கப்படவில்லை என்றால் எனக்குஅது பற்றி தெரியவில்லை. நான் முறையாக வழக்கை விசாரணை செய்யவில்லை என்பதால் தான் நான் தெரியவில்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த பண்டங்கள் தயார் செய்வதற்காக பெறப்பட்ட மூலப்பொருட்கள் அனைத்தும் ராஜகோபாலின் மருமகள் ஹேமலதா என்பவருடைய நிறுவனத்திலிருந்து பெறப்பட்டவை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் அவரை எதிரியாக சேர்க்கவில்லை என்றால் எனக்கு பிந்தைய அதிகாரி தான் விசாரணை அறிக்கை தாக்கல் செய்துள்ளார். நான் அவரை விசாரித்தேனா என்றால் இல்லை. அப்படியானால் நான் அந்த ஆவணங்களைப் பார்த்து விசாரணை செய்தேன் என கூறுவது நம்பத்தகுந்தது அல்ல என்றால் சரியல்ல. சுகுமார் என்ற 3 ஆம் எதிரி ஏற்கனவே விருப்ப ஓய்வு மனு

கொடுத்து அதன்படி 30.09.2006 அன்று பணி ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான், அதற்கான ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3 ஆம் எதிரியை வேண்டுமென்றே இந்த வழக்கில் எதிரியாகச் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. அவர் கையெழுத்து செய்ததாகச் சொல்லும் ஆவணங்களை பின்னிட்டு இந்த வழக்கிற்கென நானும் தனி அலுவலரும் எதிரியை மிரட்டி கையொப்பம் பெற்றோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்திலும் எந்த பதவியில் உள்ள நபரால், எந்த தேதியில், தயாரிக்கப்பட்டது என குறிப்பு இடம்பெறவில்லை என்றால் சரிதான். முறையாக அந்த ஆவணங்கள் தயார் செய்யப்பட்டிருந்தால் அந்த தயார் செய்த நபர்கள் மூலமாகவே அந்தஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கும் என்றாலும், நான் அந்த ஆவணங்களை குறியீடு செய்ய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 ஆம் எதிரிகள் எந்த இனிப்பு பண்டங்களையும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த எதிரிகள் விற்காமல் எந்த இனிப்பு பண்டங்களையும் வைத்திருந்து அது கெட்டுப்போனதாகவும் இந்த வழக்கில் கூறப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் தனி அலுவலர் விசாரணைக்கு ஆஜராகவில்லை என விசாரணை அதிகாரி அவரது தண்டத்தீர்வு நடவடிக்கையின் தீர்ப்பின் பக்கங்கள் 3, 4, 5 இல் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என் மூலமாக சட்டப்பூர்வமாக தாக்கல் செய்ய முடியாது என்றாலும், யார் அந்த ஆவணங்களை தயார் செய்தாரோ அவர் மூலமாகத்தான் அந்த ஆவணங்கள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சியாக கேசவன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். கேசவன் அவரது விசாரணையின்போது அவர் தான் இனிப்பு பண்டங்கள் தயார் செய்வதற்கான கோப்புகளை தயார் செய்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். நாங்கள் தவறான வழக்கை பதிவு செய்துள்ளோம் என்றாலும், அதற்கு ஆதரவாக அவர் சாட்சியம் அளித்ததால் அவரை நான் இந்த வழக்கில் எதிரியாக சேர்க்காமல் சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அனைத்து பில்களிலும் முதலாம்

CMT

எதிரிதான் சம்மதம் செய்து கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். அவர் தான் முழுக்க முழுக்க சுயலாபம் அடையவேண்டும் என பண்டங்களை தயார் செய்துள்ளார் என்றாலும், ஆனால் நான் இந்த எதிரிகளை அலைக்கழிக்க வேண்டும் என சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளித்தபடி எந்த சாட்சிகளையும் முறைப்படி விசாரணை செய்யவிலலை என்றாலும், நான் எந்த ஆவணங்களையும் முறைப்படி சேகரிக்கவில்லை என்றாலும், நான் தவறான சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 2, 3 எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் உண்மையிலேயே எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் நான் முறைப்படி வழக்கை விசாரித்திருந்தால் 2, 3 எதிரிகளை இந்த வழக்கில் சேர்த்திருக்கவே வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 2, 3 எதிரிகள் நஷ்டத்திற்கு பொறுப்பில்லை என்றாலும், அவர்கள் எந்தவிதமான சட்டத்திற்கு புறம்பான ஆதாயமும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரிகளின் மீது பொய்யான வழக்கை தொடுத்துள்ளதால் அதை அனுசரித்து தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>4, 5, 7, 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கிற்கான புகார் எங்களுக்கு நேரடியாக வரவில்லை அது துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு பின்பு அங்கிருந்து எங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. 28.04.2009 அன்று எங்களுக்கு இந்த புகார் பெறப்பட்டது. ஆனால் முதல் தகவல் அறிக்கையில் 17.02.2009 அன்று காவல் ஆய்வாளர் வணிக குற்றப்பிரிவு உத்தரவுப்படி 28.04.2009 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். ஆனால் 13.02.2009 ஆம் தேதி காவல் கண்காணிப்பாளர் குற்ற புலனாய்வு பிரிவு அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்று அதன் பின்பு என குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் 28.04.2009 அன்று தகவல் கிடைக்கப்பெற்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல, ஏனென்றால் என்னால்

28.04.2009 அன்று தான் பெறப்பட்டது. அப்படியானால் 28.04.2009 க்கு முன்பு எனக்கு இந்த வழக்கு பற்றிய விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 28.04.2009 அன்று பதிவு செய்த போது நான் என்னென்ன ஆவணங்களை பார்வையிட்டேன் என்றால் துணை பதிவாளரால் கொடுக்கப்பட்ட புகார், மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள 31 ஆவணங்களை நான் பார்வையிட்டேன். புகாரில் என்னென்ன ஆவணங்கள் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது என குறிப்புகள் எதுவும் இடம் பெற்றுள்ளதா என்றால் இல்லை.

2. நான் அந்த ஆவணங்களை புகாரின் போது பார்வையிட்டேன் என இந்த வழக்கிற்கென சாட்சியம் இருக்கிறேன் என்றால் சரி அல்ல. இந்த வழக்கிற்கான புகார்தாரரை எப்போது நான் விசாரணை செய்தேன் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றே விசாரணை செய்தேன். அப்படியானால் 12.05.2009 அன்று அவரை விசாரணை செய்ததாக நான் வாக்குமூலம் தாக்கல் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் 28.04.2009 அன்று பதிவு செய்ததாக கூறப்படும் வாக்குமூலத்தை மறைத்து தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரின் வாக்கு மூலத்தில் நான் அவரிடம் இருந்து ஆவணங்களை பெற்றதாக குறிப்புகள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை.

3. 10/5/2009 அன்று நான் சிவஞானம் என்பவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். இவரிடமிருந்து நான் என்னென்ன ஆவணங்களை பெற்றேன் என காண்பிக்கும் தனிப்பட்ட ஆவணம் எதையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. சிவஞானம் தனது விசாரணையின் போது மாநில உணவக மேலாண்மை கல்லூரியின் முதல்வர் குமார் என்பவரை பற்றி ஏதேனும் என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. ஏனென்றால் அந்த அறிக்கை 16/8/2009 அன்று தான் பெறப்பட்டுள்ளது. உண்மையிலேயே சிவஞானம் என்பவர் அந்த குமார் என்பவருக்கு அறிக்கை பெறுவதற்காக கடிதம் அனுப்பி இருந்தால் அது பற்றி அவரது வாக்குமூலத்தில்

குறிப்பிட்டு இருப்பார் என்றாலும் இந்த ஆவணம் இந்த வழக்கிற்கான பின்னிட்டு உருவாக்கப்பட்டது என்றாலும் சரி அல்ல.

4. பொதுவாக கூட்டுறவு சங்கத்தில் பணிபுரியும் நபர்களுக்கான தனிப்பட்ட கடமைகளும் பொறுப்புகளும் நியமிக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். நான் எனது விசாரணையின் போது இனிப்பு பண்டங்கள் மொத்தமாக எவ்வளவு செய்யப்பட்டது என்றும் அதில் கூட்டுறவு சங்கத்தால் எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது என்றும் அதில் எவ்வளவு இனிப்பு பண்டங்கள் கெட்டுப் போனது என்பது பற்றியும் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அவ்வாறான எந்த விவரமும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் இல்லை என்றால் சரியல்ல ஏனென்றால் புகாரிலேயே அது கொடுக்கப்பட்டுள்ளது. விசாரணை அலுவலர் தனது விசாரணையை முடித்து தாக்கல் செய்த அறிக்கையை என்னிடம் தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. விசாரணை அறிக்கையை பரீசீலித்து பார்த்தால் தான் யார் எந்த வகையில் குற்றம் முறையீட்டில் ஈடுபட்டார் என்ற விவரம் எனக்கு தெரிய வந்திருக்கும் என்றால் சரிதான். ஆனால் புகாரியிலேயே அதை அது பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது.

5. இந்த வழக்கு தொடர்பாக நடத்தப்பட்ட தண்டத்தீவு நடவடிக்கை பற்றி நான் எனது விசாரணையின் போது தெரிந்து கொள்ளவில்லை. 27/2/2009 அன்று அந்த தண்டத்தீவு நடவடிக்கை முடிவு பெற்றது என்றாலும் அதன் தீர்ப்பு நகலை நான் எனது விசாரணையின் போது பெற்றேனா என்றால் பெறவில்லை. அந்த தண்டத்தீர்வு நடவடிக்கையை நான் பார்த்திருந்தால் கூட யார் யார் என்னென்ன முறை கேட்டில் ஈடுபட்டிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரிய வந்திருக்கும் என்றாலும் நான் அதை பார்வையிடாதால் தான் எனக்கு அது பற்றி தெரியவில்லை என்றால் சரியல்ல. 5/02/2010 தேதியிட்ட ந.க.606/09/ச.ப மூலம் கணேசன் என்பவரால் பிறப்பிக்கப்பட்ட தண்ட வசூல் ஆணைகளை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் நான் 26/06/2009 நான் வேறு பணிக்கு சென்று விட்டாதால் இந்த வழக்கிற்கான விசாரணையை அந்த நேரத்தில் நான் செய்யவில்லை. அப்படியானால்

அதற்கு பின்னிட்ட தேதிகளில் உள்ள ஆவணங்கள் என் மூலமாக ஆவணமாக இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியாது என்றாலும் அவ்வாறு தாக்கல் செய்திருந்தால் அது சட்டத்திற்கு புறம்பானது என்றாலும் நான் அந்த ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் அரசு தரப்பு ஆவணம் 13 தவிர அரசு தரப்பு ஆவணங்கள் 14 முதல் 43 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் இந்த நீதிமன்றத்திற்கு நான் மேற்கூறிய தேதிக்கு பின்னிட்டு வரப்பட்டது என்றாலும் அதனால் அந்த ஆவணங்களை என்னால் முறைப்படி இந்த நீதிமன்றத்தில் குறியீடு செய்திருக்க முடியாது என்றாலும் அந்த ஆவணங்களை பற்றி எந்த விவரமும் எனக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரி அல்ல. நான் உண்மையிலேயே அந்த ஆவணங்களை எனது விசாரணையின் போது பார்வையிட்டு இருந்தால் அந்த ஆவணங்களுக்குரிய நபர்களை நான் எனது விசாரணையின் போது விசாரித்து இருப்பேன் என்றாலும், நான் அவ்வாறான எந்த விசாரணையும் முறைப்படி செய்யாமல் ஆசா 1 கொடுத்த புகாரின் அடிப்படையில் இயந்திரத்தனமாக எதிரிகளை குற்றவாளிகளாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றாலும் தண்டத்தீவு நடவடிக்கையை பார்த்திருந்தால் நான் அதில் கூறப்பட்ட நபர்களை இந்த வழக்கில் எதிரிகளாக சேர்த்திருப்பேன் என்றாலும் இந்த வழக்கத்திற்கான எதிரிகளை இந்த வழக்கில் சேர்த்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரி அல்ல.

6. தண்டத்தீர்வை நடவடிக்கையில் சுமார் 20 நபர்கள் உள்ளாக்கப்பட்டு இருந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் அந்த தண்டத்தீர்வு நடவடிக்கையில் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்ட நபர்களை சாட்சிகளாக இந்த வழக்கில் விசாரித்துள்ளேன் என்றாலும் நான் அவர்களை விசாரணை செய்த போது தண்டத்தீவு நடவடிக்கை பற்றி அவர்களிடம் விசாரணை செய்யாமல் விட்டு விட்டேன் என்றால் சரியல்ல ஏனென்றால் அது தனிப்பட்ட முறையில் விசாரணை நடந்தது. நான் பணிபுரிந்த போது விசாரணை அறிக்கையை பார்வையிட்டு இருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். ஜெயராமன் , சின்னத்தம்பி, வீரபாஸ்கர், கேசவன், செல்வராஜ், தட்சிணாமூர்த்தி, சக்திவேல், சுப்பிரமணி,

CWP

மற்றும் ஒரு செல்வராஜ் ,சோமசுந்தரம், மணிவண்ணன், கோவிந்தராஜ், ஜெயராஜ், செல்வராஜ் ,வேலுச்சாமி, லட்சுமி, ரங்கநாதன், மற்றும் காசிநாதன் ஆகியோரை நான் விசாரித்து வாக்குமூலம் வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம். நான் சாட்சியாக விசாரித்த நபர்களில் ஜெயராஜ், செல்வராஜ், ரங்கசாமி, சின்னத்தம்பி, கேசவன், செல்வராஜ், மணிவண்ணன், லட்சுமி, ரங்கநாதன், காசிநாதன் ஆகியோரை நான் இந்த வழக்கில் குற்றவாளியாக சேர்க்காததற்கான காரணம் ஏதேனும் உண்டா என்றால் அவர்களுக்கு எதிரான சாட்சிகள் ஏதும் இல்லை.

7. கேசவன் என்பவர் தனது வாக்குமூலத்தில் "மாவட்டம் முழுவதும் கூட்டுறவு நியாயவிலைக்கடைகளில் இனிப்புகள் செய்யவேண்டும் என்று என்னிடம் தனி அலுவலர் கூறினார் என்றும் அது சம்மந்தமான கோப்பினை நிர்வாக மேலாளர் என்ற முறையில் தயாரித்து அனுப்பினேன் என்றும், அதன் அடிப்படையில் அதன் பிரிவு அலுவலராக இருந்த கல்யாணசுந்தரம், என்னிடமும சுகுமாரிடமும கையொப்பம் பெற்றனர் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்". அ.சா.ஆ.9 ஆவணத்தில் எதிரி ராஜேந்திரன் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அப்படியானால் ராஜேந்திரனை எந்த வகையில் நான் குற்றவாளியாக சேர்த்தேன் என்றால் இந்த ஆவணத்தின் அடிப்படையில் குற்றவாளியாக சேர்க்கவில்லை. கேசவனை விட்டு விட்டு அ.சா.ஆ.9 ல் குறிப்பிடப்பட்டுள்ள பிறநபர்களை நான் எவ்வாறு சேர்த்தேன் என்றால் கேசவன் நிர்வாகத்தில் தான் பணிபுரிந்தார். சப்ளை செய்வதில் பணிபுரிய வில்லை. நிர்வாக மேலாளர் உத்தரவு பிறப்பிக்காமல் அதற்கு கீழ் பணிபுரியும் நபர்கள் எந்த வேலையும் செய்ய முடியாது என்றால் சரிதான். அ.சா.ஆ.9 ஆவணம் 2 பக்கங்களை உடையது. இந்த ஆவணங்கள் மொத்தம் 8 பக்கங்கள் உடையது என்றாலும் நான் கூடுதல் பக்கங்களை கூறினால் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்களையும் நான் எதிரியாக சேர்க்க வேண்டி இருக்கும் என்பதால் நான் அந்த பக்கங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் இந்த வழக்கத்திற்கான விசாரணை அதிகாரியும், பொய்யான ஆவணங்களை தயார் செய்து இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளோம்

என்றால் சரியல்ல. நிர்வாகத்திலிருந்து கூட்டுறவுத்துறை மூலமாக எவ்வளவு சர்க்கரை , நெய் , ஆயில் , முந்திரி மற்றும் பிளாஸ்டிக் டப்பாக்கள் ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டது என்றும் தனியார் நிறுவனம் மூலமாக எவ்வளவு அந்த பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது என்றும் எனது விசாரணையில் நான் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம், சிவஞானம் என்பவர் அவரது வாக்குமூலத்தில் கூறியுள்ளார். ஆனால் அவரது அறிக்கையில் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டு கூறவில்லை. இனிப்பு பண்டங்களை செய்வதற்கு கல்யாணசுந்தரத்திற்கு எந்த வகையில் தொடர்பு உண்டு என்றால் கண்காணிப்பாளர் என்ற முறையில் இனிப்பு பண்டங்களை செய்வதற்கு மூலப்பொருட்களை பெறுவது, இடம் வாடகைக்கு பிடித்தல், இனிப்பு தயார் செய்வதற்கான கூலி ஆட்களை நியமித்தல், ஆகியவற்றை செய்ததால் அவருக்கு தொடர்பு உண்டு.

8. சிவஞானம் என்பவர் தனது விசாரணை அறிக்கையிலும் மற்றும் அவரது வாக்குமூலத்திலும் எந்த எதிரிகளைப் பற்றியும் குறிப்பிட்டு நான் அந்த அவர் மீது சாட்டப்பட்ட குற்றங்களை ஒப்பிட்டு பார்த்தேன் என்றும் கூறவில்லை என்றாலும் பொறுப்பாளர் என்ற அடிப்படையிலும் ஏற்பட்டதினாலும் எதிரிகளாக குற்றம் சாட்டுகிறேன் என கூறியுள்ளார் என்றால் சரிதான். நான் பணியாற்றிய காலகட்டம் வரை சிவஞானம் என்பவர் எந்த பொருளையும் ஒப்பிட்டு பார்த்து அதன் குறைபாடுகளை என்னிடம் கூறவில்லை.அ.சா.ஆ.14 முதல் 43 வரையிலான ஆவணங்கள் என் மூலமாக கைப்பற்றபட்டதாக எந்தவித கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் முன்னிலையில் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் நான் இந்த ஆவணங்களை நேரடியாக பெறவிலலை . எனக்கு பிந்தைய அதிகாரி பெற்றுள்ளார். அ.சா.ஆ.39 மற்றும் சிவஞானத்தின் வாக்குமூலத்திற்கும் முரண்பாடுகள் காணப்படுகிறது என்றால் அ.சா.ஆ.39 ல் தனித்தனியாக காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் வாக்குமூலத்தில் மொத்தமாக கூறியுள்ளார். வாக்குமூலத்தில் கூறப்பட்ட சங்கதிகளுக்கும் எங்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களுக்கும் பெருத்த முரண்பாடுகள் உள்ளது என்றாலும் பின்னிட்டு

இந்த வழக்கிற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதால் தான் அவ்வாறு ஏற்பட்டுள்ளது என்றாலும் சரி அல்ல. அ.சா.ஆ.39 ல் மொத்தமாக பெறப்பட்ட தொகை எவ்வளவு என்று காசோலை மூலமாக பெறப்பட்ட தொகை எவ்வளவு என்று குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.அ.சா.ஆ.39 ல் பக்கம் 48 ல் 110 A/C கைராசி ஏஜென்சீஸ் கேஸ் ரூ.4962/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதானஅ.சா.ஆ.39 ல் அதே பக்கத்தில் நந்தினி டால் மில்லிருந்து ரூ.16760/- க்குபெறப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். அதே பக்கத்தில் வாடகை மின்கட்டணம், மாஸ்டர், மற்றும் தொழிலாளர் கட்டணமாக ரூ. 1,43,825/-அ.சா.ஆ.39 என்றும், 20 நாட்களுக்கான பாத்திர வாடகையாக ரூ. 33,800/- காணப்படுகிறது என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக வாடகை தொகை மற்றும் மின்கட்டண தொகை செலுத்தப்பட்டது என்றால் சரிதான். ஆனால் 1 ம் எதிரி பிறப்பிக்கப்பட்ட அ.சா.ஆ.9 செயல் முறை ஆணையில் அது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அது போதுமான விவரங்கள் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கைது செய்துள்ள எதிரியிடமிருந்து ஏதேனும் வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. தனி அலுவலர் என்ன உத்தரவிடுகிறாரோ, அதன் அடிப்படையில் தான் அவருக்கு கீழ் பணிபுரியும் அலுவலர்கள் பணியாற்ற வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் ஏழாம் எதிரியாக சேர்க்கப்பட்ட அருணகிரி என்பவர் பெயரில் போலியாக வாடகை பில் தயார் செய்து அது தொடர்பாக மேற்கண்ட நபர் துறை ரீதியாக புகார் கொடுத்தார் என்றாலும் அந்தப் புகாரின் மீது துறை ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றாலும் அதன் அடிப்படையில் மணிவண்ணன் என்ற அந்த சங்கத்தின் ஊழியர் இரண்டு வருடம் பணி நீக்கம் செய்யப்பட்டார் என்ற விவரத்தை எனது விசாரணையின் போது நான் தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை.அவர் மீது ந.க.எண்.3238/2011 நாள் 31/01/2012 மூலமாக பணி நீக்கம் செய்யப்பட்டு தண்டனைக்கு உள்ளானார் என்ற விவரத்தை எனது விசாரணையின் போது நான் தெரிந்து கொள்ளவில்லை. இந்த வழக்கில் முதல் மற்றும் இரண்டாம் எதிரிகளை தவிர்த்து பிற எதிரிகளை நான்தான் கைது செய்தேன். இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள ஏழு மற்றும்

எட்டாம் எதிரிகள் தண்ட தீர்வு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படவில்லை என்ற விவரத்தை நான் எனது விசாரணையின் போது தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை. எத்தனை நாட்கள் இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள இனிப்பு பணங்களை தயார் செய்வதற்காக திருமண மண்டபங்கள் வாடகைக்காக எடுக்கப்பட்டது என்றும் அதற்கான தொகை எவ்வளவு என்றும் பாத்திரங்களுக்கான ஒரு நாள்வாடகை தொகை எவ்வளவு என்றும் எத்தனை நாட்கள் மண்டபமும் பாத்திரங்களும் வாடகைக்காக எடுக்கப்பட்டது என்றும் எனது விசாரணையின் போது நான் தெரிந்து கொண்டேன் என்றால் மொத்தமாக அதற்கான தொகைகள் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் தனித்தனியாக பிரித்து குறிப்பிடப்படவில்லை. மண்டபம் மற்றும் பாத்திரங்கள் குறித்த தனிநபர் சாட்சிகள் யாரையும் நான் எனது விசாரணையின் போது விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அது தொடர்புடைய நகராட்சி மற்றும் மின்சார வாரியம் அவர்களை நான் விசாரித்து வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை. நான் இந்த வழக்கு கோப்பை இன்றைய விசாரணை அதிகாரியான செல்வம் என்பவரிடம் ஒப்படைத்தேன். இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள நடவடிக்கைகள் அனைத்தும் முதலாம் எதிரி தான் உத்தரவு பிறப்பித்து நடைபெற்றுள்ளது என்றால் சரிதான். பொதுவாக தனி அலுவலர் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் அந்த நடவடிக்கைகள் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என தான் அவருக்கு கீழ் பணியாற்றிய பணியாளர்கள் செயல்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். பணியாளர்கள் தவறு செய்தால் அதன் நிறை குறைகளை சரி செய்ய வேண்டிய பொறுப்பு தனி அலுவலருக்கு உண்டு என்றால் சரிதான்.அ.சா.ஆ.9 ல் காசோலைக்காக அனுமதித்து உத்தரவு பிறப்பித்தவர் முதலாம் எதிரி என்றால் சரிதான். அ.சா.ஆ.10, 11, 12 ,15, முதல் 28 ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் அனைத்தையும் காசோலையாகவும், ரொக்கமாகவும், வழங்குவதற்கு முதலாம் எதிரி தான் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.ஆ.29 முதல் 43 வரையிலான ஆவணங்களில் இனிப்புகள் கொள்முதல் செய்யப்பட்டதற்கும் அதற்கான தொகையை திரும்ப செலுத்தியதற்கும் விற்பனையாகாத பண்டங்கள் கெட்டுபோனதற்கான தொகைகள் கொடுப்பட்டுள்ளது ஆனால்

கெட்டுப்போனதற்கான தொகைகள் திரும்ப வசூல் செய்யப்பட்டதா என்ற விவரம் காணப்படவில்லை என்றால் சரிதான். பெரம்பலூர், அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய கிளைகளுக்கு எவ்வளவு இனிப்புகள் மற்றும் பலகாரங்கள் விற்பனைக்காக வழங்கப்பட்டது என்றும் அதில் எவ்வளவு தொகைக்கு பொருட்கள் விற்கப்பட்டது என்றும் விற்பனையாகாமல் கெட்டுப்போன பொருட்களுக்கான தொகை எவ்வளவு என்றும் கெட்டுப்போன தொகைகள் குறித்து தொகை ஏதும் திரும்பப் செலுத்தப்பட்டதா என்பது குறித்தும் இல்லையென்றால் சரியல்ல ஏனென்றால் வாக்குமூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.14 முதல் 34 வரையிலான ஆவணங்கள் முதன்மையான சான்றாவணங்கள் இல்லை என்றாலும் அதனை சட்டப்படி ஏற்றுக்கொள்ளமுடியாது என்றாலும் சரியல்ல. அ.சா.ஆ. 14 ல் மேலாளர் என்ற நபர் மட்டும் தான் கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். அ.சா.ஆ.15 ல் அடித்து திருத்தப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.16,17,18 ல் கூட்டுறவு நிறுவனத்தின் தலைமை அலுவலக பெயர் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதை யார் பெற்றார் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 7 மற்றும் 8 எதிரிகள் சம்மந்தப்பட்ட எந்த ஆவணமும் என்னால் கைப்பற்றப்பட்டு என்னால் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். விசாரணை அலுவலர் அவரது விசாரணையின் போது பதிவு செய்த சாட்சிகளின் வாக்குமூலத்தை என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அவர் விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலத்தை நான் விசாரணையின் போது படித்து பார்த்திருந்தால் கூட இந்த வழக்கில் யார் உண்மையாக சம்பந்தப்பட்டிருப்பார் என்ற விவரம் எனக்கு தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.11 ல்ஹரிணி ட்ரேடர்ஸ் சேலம் நிறுவனத்திற்கு மிட்டாய், பிஸ்கட் மற்றும் சாக்லேட் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கு மட்டும் தான் உரிமம் உள்ளதே தவிர இனிப்பு பண்டங்களை தயார் செய்வதற்கான மளிகை பொருட்களை விற்பதற்கான உரிமம் அந்த நிறுவனத்திற்கு இல்லை என்றால் சரிதான். அந்த கடையின் உரிமையாளர் ஆறாவது எதிரி என்றால் சரிதான். இந்த வழக்கில் ஒன்று மற்றும் ஆறாவது எதிரியை தவிர பிற எதிரிகள் வேறு தொழிற்சங்கத்தை சார்ந்தவர்கள்

என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. இந்த வழக்கின் ஏழாம் எதிரி பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் அண்ணா தொழிற்சங்கத்தின் மூலமாக போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார் என்றாலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு அவர் மீது தவறாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அவ்வாறு தவறாக பதிவு செய்யப்பட்ட வழக்கிற்கு நானும் துணைபோனேன் என்றாலும் , கூட்டுறவு துறையில் பணியாற்றும் நபர்களை தவிர பிற நபர்கள் மீது வழக்கு தொடர்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றாலும், இந்த சங்கத்திற்கு நெய், சர்க்கரை மற்றும் எண்ணெய் மற்றும் முந்திரி ஆகியவை சப்ளை செய்த ஹரிணி டிரேடர்ஸ் மற்றும் கணேஷ் டிரேடர்ஸ், சூர்யா டிரேடர்ஸ், கைராசி ஏஜென்சீஸ், சூர்யா பேக்கிங், சூர்யா மார்க்கெட்டிங், பாலாஜி டிராவல்ஸ் ஏஜென்சிஸ் மற்றும் இதர டிரேடர்ஸ் நிறுவனத்தினரை இந்த வழக்கில் நான் குற்றவாளியாக சேர்க்காததற்கான காரணத்தை குறிப்பிட்டு என்னால் கூற முடியாது என்றால் சரிதான். பின்னிட்டு வந்த விசாரணை அதிகாரி செய்திருக்கலாம். ஹரிணி டிரேடர்ஸ் மற்றும் கணேஷ் டிரேடர்ஸ், சூர்யா டிரேடர்ஸ், கைராசி ஏஜென்சீஸ், சூர்யா பேக்கிங், சூர்யா மார்க்கெட்டிங், பாலாஜி டிராவல்ஸ் ஏஜென்சிஸ் ஆகிய நிறுவனங்களின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமலும் , சில அரசியல்வாதிகளின் தூண்டுதலின் பேரில் தவறான வழக்கு தொடர துணை போனேன் என்றாலும் 7, 8 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றாலும், அவர்களால் இந்த சங்கத்திற்கு எந்த வித நஷ்டமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd-
Judicial Magistrate No.I,
Perambalur.

Lawlipedia